
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1039

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

40

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கல்வி!

## – கழகம் கொண்ட கடமை...



ஒரு நூற்றாண்டுக்கு முன்புவரை உலகம் முழுவதும் கல்வி என்றாலே, மத நிறுவனங்களால்தான் பெரும்பாலும் வழங்கப்பட்டன. அவை அறிவியலைக் காட்டிலும் அம்மதத்தின் பெருமைகளையும், பண்பாடு, கலாச் சாரங்களையும், மதம் சார்ந்த வாழ்வியல் நெறிகளை போதிப்பதையும், இறை நம்பிக்கையை வளர்ப்பதையும்தான் நோக்கமாகக் கொண்டிருந்தன.

இன்றைய பீகாரில் உள்ள ராஜ்கிரியில், கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் குப்தப் பேரரசர் முதலாம் குமார குப்தரால் நிறுவப்பட்ட ஒரு பழைமையான கல்வி நிறுவனமாக விளங்கிய நாளந்தா பல்கலைக்கழகம் முதற்கொண்டு, யூத மதத்தில் தால்மூத், எபிரேய மொழி கற்பிக்கும் மையங்கள், பாபிலோனிய எசிவாக்கள் ஆகியவை வரை முக்கிய மதக் கல்விச்சாலைகளாகத் திகழ்ந்துள்ளன.

மதகுருமார்களுக்கான பயிற்சி பள்ளிகளாக, கத்தோலிக்க கதீட்ரல்கள் 5-ஆம் நூற்றாண்டிலேயே உருவாகிவிட்டன. மொனாஸ்டிக் பள்ளிகள் எனப்படும் கிறிஸ்துவ தேவாலய பள்ளிகளும் பைபிள், இலக்கியம், தத்துவம், கணிதம், இசை போன்றவற்றை கற்பித்தன.

இஸ்லாமிய மதக் கல்வி நிறுவனங்களான மதரஸாக்கள் குர்ஆன், ஹதீஸ், ஃபிக்ஹ், அரபு மொழியைக் கற்பிக்கும் பணியை எட்டாம் நூற்றாண்டில் இருந்து செய்து வருகின்றன. பஞ்சாபி, குருமுகி எழுத்து, புனித குரு கிரந்த் சாஹிப் ஆகியவற்றை கற்பிக்கும் பணியை சீக்கிய குருத்வாராக்கள் 15-ஆம் நூற்றாண்டில் தொடங்கின. ஒழுக்கம், நிர்வாகம், தத்துவம், மதப்பயிற்சி, தியானம் ஆகியவற்றை கற்றுத்தந்த ஜப்பானிய கொன்ஃபூஷிய கல்வி முறை கி.மு. 500-ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. உலகப் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களே குறிப்பிட்ட காலம்வரை கிறிஸ்துவ மதக் கல்வியையே போதித்தன.

### கல்வியில் இந்தியாவின் வேறுபாடுகள்

இப்படி உலகம் முழுக்கவே கல்வியும், மதமும் பின்னிப்பிணைந்தே செயல்பட்டன. இந்த நிலை, கடந்த 200 ஆண்டுகளில் பல்வேறு பரிணாம வளர்ச்சிகளைக் கண்டிருக்கிறது. மதக் கல்வி நிறுவனங்களாகவே இருந்தாலும் மதம், ஆன்மிகம் குறித்த பாடங்கள் குறைந்து, அறிவியல், வரலாறு, கணிதம் சார்ந்த பாடங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டன. கல்விக்கும் மதத்துக்கும் இடையே பிரிவினை ஏற்பட்டு, இரண்டும் தனித்தனியே இயங்கத் தொடங்கியுள்ளன. ஆனால், மற்ற உலக நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இதில் மிகப் பெரிய வேறுபாடு இருந்தது.

இந்து மதத்தில் வேதங்கள், உபநிடதம் ஆகியவற்றை கற்பிக்கும் குருகுலங்கள் இருந்தன. ஆசிரியரின் வீட்டுக்கு மாணவர்கள் சென்று படிக்க வேண்டும். எல்லா மாணவர் களும் படிக்க முடியாது, ஜாதி ரீதியான பாகுபாடுகள் அதில் இருந்தன. வருணாசிரம படிநிலைப்படி இந்து ஆரியர், வணிகம் செய்யும் வைசியர்கள், சத்திரியர்களில் சிலர் மட்டுமே படிக்க உரிமை பெற்றவர்களாக இருந்தனர். பெரும்பான்மை மக்களான சூத்திரர்களும் பஞ்சமர்களும் கல்வியில் இருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள், உயர் ஜாதியினர் கல்வி கற்பதை காதால் கேட்டாலே காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்ற வேண்டும் என்றது மனுசாஸ்திரம்.

இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராக, புத்தரின் உபதேசங்களை பரப்பும் கல்வி மையங்கள், சமண முனிவர்களின் தர்ம சாலைகளும் கல்வியை போதித்துள்ளன என்ற வரலாறு இங்கு இருந்தது என்றாலும்கூட, அது முழுமையாக அனைத்து மக்களுக்குமான கல்வியை வழங்கிட போதுமானதாக இருக்கவில்லை. நாளடைவில் அவற்றையும் ஆரியம் விழுங்கியதுதான் வரலாற்றில் நடந்தது. முதன்முதலாக, அனைத்துத் தரப்பு மக்களுக்கான கல்வியின் அவசியம் பற்றிய சிந்தனையே பிரிட்டிசார் காலத்தில்தான் உருவானது.

> இந்தியாவில் முதன்முதலாக அறிவியல் கல்விக்கு விதை ஊன்றினார் மெக்காலே. அதன்பிறகு, இந்தியாவில் மதச் சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் ஏராளம் உருவாகின. அவையாவும், உலக நாடுகளைப்போல அறிவியல் கல்வியைத் தழுவின.

### கதவைத் திறந்த மெக்காலே

1832-இல் ஆங்கில அரசு இந்தியக் கல்வி முறையை ஆராய ஒரு குழுவை நியமித்தது. அதில் மாறுபட்ட கருத்துகள் நிலவிய காரணத்தால் இறுதி முடிவெடுப்பதற்காக லிபரல் கட்சியின் தலைவராக இருந்த லார்டு மெக்காலே இந்தியா வந்து கல்விப் பொறுப்பை ஏற்க அனுமதி அளிக்கப்பட்டது. அவர், இந்தியாவுக்கு வந்த பிறகு, ஆங்கிலம் வழியாகக் கல்வி பயிற்றுவிப்பதே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார். மட்டுமல்லாது, இந்தியக் கல்விமுறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் அவரே திட்டமிட்டார்.

“நமக்கு முன்புள்ள கேள்வி, உலகம் தழுவியதும் நாம் முழு மனதோடு ஒப்புக் கொண்டதுமான ஒரு மொழியின் மூலம் கற்பிக்கப் போகின்றோமா, இல்லையா என்பதுதான். நமது மொழியில் உள்ள நூல்களுக்கு ஈடாக, எந்த ஒரு துறையிலும் எவ்விதமான நூல்களும் இல்லாத ஒரு நாட்டில், ஆங்கில வழிக்கல்வியைத் தவிர வேறு வழி என்ன உள்ளது? ஐரோப்பிய அறிவுத்துறைகளைக் கற்பிக்கின்றோம் என் றால், உலகப் பொதுமையான அறிவுத் துறையைக் கற்பிக்கிறோம் என்பது பொருளாகும். ஐரோப்பிய அறிவியல், தத்துவம், மருத்துவம், கால்நடை மருத்துவம், கலையியல் ஆகிய பாடங்களுக்கு மட்டுமே பொதுநிதியைப் பயன்படுத்த வேண்டும். அப்படி இல்லாமல், இந்தியக் கல்வி முறைகளுக்கு நாம் செலவிடுவோமேயானால் அது பயனற்றதாகும். இந்திய வரலாறு என்பது என்ன? 30 அடி உயரமுள்ள அரசன் 30 ஆயிரம் ஆண்டுகள் அரசாண்டார் என்று சொல்வதுதானே! இதேபோல இந்தியப் புவியியலிலும் உள்ள கடல்கள் பாற்கடல், வெள்ளை கடல் பற்றியதுதானே! இதைப் படிக்கும் சிறுமிகளிடம்கூட இக்கருத்துகள் நகைப்பை வரவழைக்குமே!” என ஆரிய கல்வி முறை மீது முதல் சம்மட்டி அடியைக் கொடுத்தவர் மெக்காலே.

ஆங்கிலக் கல்விக்கு ஆதரவான மெக்காலேயின் கல்விக் கொள்கையை அன்றைய இந்திய கவர்னர் ஜெனரலான பெண்டிங் பிரபு ஏற்றுக்கொண்டு, மெக்காலே திட்டத்துக்குரிய ஆணையை, 7.3.1835-இல் வெளியிட்டார். இந்தியாவில் முதன்முதலாக அறிவியல் கல்விக்கு விதை ஊன்றினார் மெக்காலே. அதன்பிறகு, இந்தியாவில் மதச் சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் ஏராளம் உருவாகின. அவையாவும், உலக நாடுகளைப்போல அறிவியல் கல்வியைத் தழுவின. குறிப்பாக, கிறிஸ்துவ கல்வி நிறுவனங்கள் பல சின்னஞ்சிறு நகரங்களிலும் ஏற்படுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான கல்விச் சேவையை வழங்கின. இம்முயற்சிகள் மத, மொழி சிறுபான்மையின மக்கள் உட்பட அனைவரும் கல்வியை நோக்கி வருவதற்கான சூழலைக்கொண்டிருக்க அந்த பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக, கல்வியை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கொண்டு சேர்த்த சிறுபான்மை கல்வி நிறுவனங்களை பாதுகாப்பதை, கடமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது திராவிட மாடல் அரசு. ஆனால், அறிவியல் கல்விமுறையின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட ஆரியவாதிகளோ மத, மொழி சிறுபான்மையினர் சார்ந்த கல்வி நிறுவனங்களை அழித்தொழிப்பதற்கான அனைத்து உத்திகளையும் வகுத்துச் செயல் படுத்திக் கொண்டிருக்கிறார். மத, மொழி இனச்சிறுபான்மையினரின் உரிமைகள் இதிலும்கூட ஆரியவாதிகளால் அபகரிக்கப் பட்டது. அனைத்துத் தரப்பு மக்களையும் ஆதரிப்பது திராவிடம்தான்!

...நீளும்

## மாற்றத்தை நிகழ்த்திய தெலுங்கானா முதல்வர்!

சமூக நலத் திட்டங்களில், திருநங்கை மற்றும் திருநம்பி சமூகத்தினரை உள்ளடக்கி தென் மாநில அரசுகள் கொடுக்கும் கவனம், ஒட்டுமொத்த ஒன்றியத்துக்கும் திராவிட நிலம் அளிக்கும் பாடம் எனலாம். அவர்களுக்கு முறையான அங்கீகாரம் வழங்க, தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளைப் போலவே, தெலங்கானாவில் காங்கிரஸ் முதல்வர் ஏ.ரேவந்த் ரெட்டி, மாற்றுப் பாலினத்தோரை சமூக நீரோட்டத்தில் இணைத்து மாபெரும் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

கடந்த ஆண்டு, ஹைதராபாத் போக்குவரத்து காவல் துறையில் திருநங்கைகள் போக்குவரத்துக் காவல் உதவியாளர்களாக நியமிக்கப்பட்டனர். சுமார் 45 பேர், போக்குவரத்து உதவியாளர்களாகவும், போக்குவரத்துப் பணிகளில் வழக்கமான துணை ஆய்வாளர்களின் கீழ் பணிபுரிந்து வந்தனர். கடந்த ஓராண்டில், அவர்களின் செயல்திறன் சிறப்பாக உள்ளதை அறிந்து, அரசு, அவர்களை மற்ற துறைகளிலும் பணியமர்த்தத் திட்டமிட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக ஹைதராபாத் மாநகராட்சி, ஹைதராபாத் பெருநகர மேம்பாட்டு ஆணையம், அம்மாநில போக்குவரத்துத் துறை ஆகியவற்றில் பணியமர்த்த திட்டமிட்டுள்ளது. குறிப்பாக ஹைதராபாத் மாநகராட்சி 25 திருநங்கைகளையும், போக்குவரத்துத் துறைக்கு 20 பேரையும் பணியமர்த்த தீர்மானித்துள்ளது. இவை தவிர, ஐடி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களில் பாதுகாப்புப் பணிக்கு அவர்களைத் தயார் படுத்துவதற்கு தெலங்கானா அரசு திட்டங்களைத் தீட்டி வருகிறது.

புறக்கணிக்கப்பட்டவர்களாகவும், ஒடுக்கப்பட்டவர்களாகவும், சமுதாயத்தில் மரியாதைக் குறைவாக நடத்தப்படும் மாற்றுப் பாலினத்தோருக்கு பாதுகாப்பான தங்குமிடம், கல்வி கற்கும் சூழலை ‘அரண் இல்லம்’ மூலம் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது. தெலங்கானா அரசு, அவர்களுக்கு அரசுத் துறைகளில் வேலைவாய்ப்பை உருவாக்கி, சமூக நீரோட்டத்தில் இணைத்துள்ளது. மக்கள் மனதில் மாற்றத்தை விதைக்கும் மறுமலர்ச்சி செயலை செய்துள்ளார். தெலங்கானா முதலமைச்சர். வாழ்த்துவோம்!

## ஃப்ளாஷ்பேக்



‘கோல்டன்’ பஷீர்



### தலைவருக்கு அளித்த வாழ்த்து மடல்!

1987-ஆம் ஆண்டு, செய்யாா் நகரில், முன்னாள் எம்.எல்.ஏ. பாபு ஜனார்த்தனம் அவர்களின் மணிவிழா, கழகப் பொதுக்கூட்டம் மற்றும் தேர்தல் நிதியளிப்பு என முப்பெரும் விழா நடைபெற்றது. சிறப்புரையாற்ற வருகை தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, ‘மீண்டும் தமிழ்நாடு முதல்வராக வேண்டும்’ என்ற வாழ்த்து மடல் வாசித்துப் பரிசளித்தேன். கூட்டத்தில், அண்ணன் ஆற்காட்டார், புலவர் கோவிந்தன் என பலர் கலந்து கொண்டனர். ‘உடன்பிறப்பே’ என அழைத்து மகிழும் நம் தலைவரை மறக்கவே முடியாது.

– ‘கோல்டன்’ பஷீர்,
முன்னாள் தொண்டர் அணித் தலைவர், வந்தவாசி நகரம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### ‘வகுப்புரிமைக் காவலர்’ எஸ்.முத்தையா மறைவு!

1953-ஆம் ஆண்டு, ஜூன் 30- ஆம் தேதி, ‘வகுப்புரிமைக் காவலர்’ எஸ்.முத்தையா மறைந்தார். நீதிக்கட்சியின் டாக்டர் சுப்பராயன் அமைச்சரவையில் இரண்டாவது அமைச்சராக இருந்த முத்தையா அவர்கள், 1928 நவம்பரில் கம்யூனல் ஜி.ஒ. என்கிற வகுப்புவாரி ஆணையைப் பிறப்பித்தார். நாகை மாவட்டம், சீர்காழிக்கு அருகில் உள்ள கிராமத்தில், அவர் மறைந்தபோது கழகத்தினர் திரண்டு வந்து இறுதி மரியாதை செய்தனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.